1979 மார்ச் 16]

முறையில் தவறான கணக்குகளைக் கொடுத்து அதிகமான அளவில் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே மதுரை, நகரத்தில். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை நகரத்தில் என்று சொல்லி பிறகு கோவை நகர் என்று சொல்லவேண்டி வரும். இப்படியே ஒவ்வொரு நகராகச் சொல்லிக்கொண்டு போகக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. என். லட்சுமிநாராயணன்: ஆகவே நோட்டுப் புத்தகங் களையும், தாள்களையும் விநியோகம் செய்வதில் ஒரு நல்ல ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மாணவர்களுக்கு நாம் எந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதே விலையில் மாணவர்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகைகளை அரசு நிச்சய மாக ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

House Numbers in Madras City.

*Q. No. 426—THIRU N. KITTAPPA; Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Madras Corporation has taken up the re-numbering of houses in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) 2,26,575 வீடுகளுக்கு கதவிலக்கங்கள் எழுதப்பட்டன. இதற்கான மொத்தச் செலவு ரூபாய் 1,65,240·09 ஆகும்.

*Q. No. 427—THIRU N. KITTAPPA; Will the Hon. the Minister for Local Administration be pleased to state;

(a) whether protests have been received by the Madras Corporation Revenue Officers for the manner of renumbering of houses from Advocates about the 20th April, 1978; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இது சம்பந்தமாக வக்கீல்களிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு புதிய எண்கள் வீடுகளுக்கு மாற்றவேண்டும் என்பது மாநகராட்சியின் யோசனையா அல்லது தமிழக அரசினுடைய யோசனையின் பேரில்தான் இவ்வாறு எண்கள் மாற்றப்பட்டதா? இந்தப் புதிய எண்கள் மாற்றுவதற்கான அவசியம் என்ன? அதற்கான காரணங்களை அமைச்சரவர்கள் விளக்குவார்களா? இவ்வாறு புதிய எண்கள் மாற்றப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறியுமா? என்னுடைய வீட்டு புதிய எண்ணை மாற்றுவதற்குக் கூட நான் மன்ற செயலாளர் அவர்களுக்கும் மற்றும் இது சம்பந்தப்பட்ட உரியவர்களுக்கும் எழுதிக் கொடுத்த பிறகும், இன்னும் பழைய எண்களுக்கே கடிதங்கள் முதலியன வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இதுபோன்ற சிரமங்கள் எல்லாம் அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, சென்னை மாநகரில் கடைசியாக 1961 ஆம் ஆண்டில் கதவிலக்கம் இடும் பணி நடைபெற்றது. அதன் பிறகு தனியார்களாலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் போன்ற நிறுவனங்களாலும் வீடுகள் கட்டுதல் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. இந்நிறுவனங்களின் பணிகளினால் சென்னை மாநகரில் கட்டிடப் பகுதிகள், குறிப்பாக, அண்ணா நகர் இந்திரா நகர், சாஸ்திரி நகர், அசோக் நகர் முதலிய சுற்றுப்புற பகுதிகளில் குடியிருப்புகள் அதிகரித்துவிட்டன. ஆகவே இவைகள் எல்லாம் முறையாக இலக்கம் இடப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதாவது 1961-லே இடப்பட்ட கதவிலக்கங்கள் தேர்தல் நடைமுறை விதி நூலில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப பின்பற்றப்படவில்லை என்ற காரணத்தால் இவ்வாறு வீட்டின் இலக்கங்களை மாற்றவேண்டிய அவசியம் நேரிட்டது. அரசினுடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் மாநகராட்சி இந்தப் பணியைச் செய்தது.

திரு. தீ. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் மற்றும், வீட்டுவசதி வாரியம் போன்ற துறைகளால் வீடுகள் அதிகமாகக் கட்டப்பட்ட காரணத்தால் இந்தமாதிரி சூழ்நிலை ஏற்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படி இலக்கம் போடுவதென்றால் இலக்கம் ஒன்றிலிருந்து போடப்படாமல், ஆரம்பத்தை விட்டு விட்டு ஏதோ க்ளாக்வைஸ், ஆண்டி க்ளாக்வைஸ் என்ற முறைகளில் சென்னை மாநகரில் போடப்படுகிறதே. இது அரசுக்குத் தெரியுமா? அதனால் பல தவறுகளும் நிர்வாகக் கோளாறுகளும் நடந்து வருகின்றனவே. ஆகவே இதைப்பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது அரசுக்குத் தெரியும். அதாவது தேர்தல் நடைமுறை நூலில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அந்த அடிப்படையிலே தான் இவ்வாறு ஆண்டிக்ளாக்வைஸ் முறைப்படி இலக்கங்கள் இடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதில் தவறு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் புதியதாக நிறைய வீடுகள், குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும், வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும் கட்டப்பட்ட காரணத்தால்தான் அவற்றின் இலக்கங்கள் மாற்றப்பட்டன என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இப்போது புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளைத்தவிர மற்றைய நகரப்பகுதிகளில் இருந்த எண்களில் எந்த விதமான முறைகேடும் இல்லாத நிலையில்ஏன் இவ்வாறு எண்கள் மாற்றப்பட்டன? அதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. இது அடுத்த மாநகராட்சி தேர்தலிலே கூட மக்களுக்கு குழப்பங்களை உருவாக்கும் என்பதை அரசு அறிந்து இதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏற்கெனவே 1961-லே கொடுக்கப்பட்ட கதவு இலக்கங்கள் தேர்தல் விதிமுறை நூலிலே குறிப்பிட்ட விதிமுறைகளைப்பின்பற்றிச் செய்யப்படவில்லை என்கிற காரணத்தால்தான் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே குழப்பம் ஏற்பட்டுத்தான் தெளிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 428— திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் பழைய கூடலூர் சாலையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ஒன்றியப் பொது நிதியிலிருந்து பாலம் கட்டவும், வேலையை போக்குவரத்துத்துறை மூலம் செய்யவும் அரசு அனுமதி கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) திட்டம் பரிசீலனையில் உள்ளது.